**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : சரவண குமார்**

**தேதி 02.02.2026 நேரம் மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று ஒடிசா மாநிலத்திற்கு 6 நாள் பயணம் மேற்கொண்டுள்ளார்.

குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம், நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும், இன்று, விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விக்சித் பாரத் இளம் தலைவர்கள் உரையாடலை தொடர்ந்து, **மை பாரத் பட்ஜெட் குவெஸ்ட்** என்ற தலைப்பில், ஒரு புதிய இளைஞர் முன்னெடுப்பை மத்திய அரசு தொடங்க உள்ளது.

புதுச்சேரிக்கு, கடந்த ஆண்டை விட, இந்த பட்ஜெட்டில், 86 கோடி ரூபாய் கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக மாநில பாஜக தலைவர் திரு. ராமலிங்கம் கூறியுள்ளார்.

---

*குடியரசுத் தலைவர் (14)*

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று தனது சொந்த மாநிலமான ஒடிசாவிற்கு, 6 நாள் பயணம் மேற்கொண்டுள்ளார். அவரது பயணத்தின் முதற்கட்டமாக, புவனேஷ்வரில் உள்ள, கோர்தா, ஜாஜ்பூர், பாலசோர், பூரி, மற்றும், மயூர் பஞ்ச் மாவட்டங்களில் நடைபெறும் கல்வி, மற்றும், கலாச்சார நிகழ்ச்சிகளில் பங்கேற்றார். நாளை, ஜாஜ்பூரில் உள்ள மா பிராஜா கோவிலில், வழிபாடு செய்த பின், பாலசோரில் உள்ள ஃபக்கீர் மோகன் பல்கலைக் கழகத்தின் 12ஆவது பட்டமளிப்பு விழாவில், தலைமை விருந்தினராக கலந்து கொள்ள உள்ளார். நாளை மாலை, ஸ்ரீஜெகந்நாதர் கோவிலில் தரிசனம் செய்யும் குடியரசுத் தலைவர், புதன்கிழமையன்று தனது சொந்த மாவட்டமான மயூர் பஞ்சிற்கு செல்ல உள்ளார். அங்கு, பழங்குடியின தலைவர் பஞ்ச்பீர் சுனராம் சோரனின் திருவுருவ சிலை, மற்றும், விளையாட்டு வளாகத்தையும் திறந்து வைக்க உள்ளார். வரும் 6ஆம் தேதி, திருமதி திரௌபதி முர்மு, பழங்குடியின மகளிர் மற்றும் இளைஞர் குழுக்களுடன் கலந்துரையாட உள்ளார்.

---

*பட்ஜெட் 1 (18)*

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும், இன்று, குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மத்திய அமைச்சரும், பாஜக எம்.பியுமான, திரு. சர்பானந்த சோனோவால், மக்களவையில் இந்த தீர்மானத்தை முன்மொழிந்தார். தொடர்ந்து பாஜக எம்.பி திரு. தேஜஸ்வி சூர்யா அதை வழிமொழிந்தார். குடியரசுத் தலைவரின் உரை,

நாட்டின் எதிர்காலத்திற்கு ஒரு ஊக்கமளிக்கும் தொலை நோக்குப் பார்வையை வழங்கி உள்ளது என்றும், திரு. சர்பானந்த சோனோவால், கூறினார்.

குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்காக, மக்களவையில், மொத்தம் 18 மணி நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதாக, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ, தெரிவித்தார். நாடாளுமன்றத்திற்கு வெளியே செய்தியாளர்களை சந்தித்த அவர், இந்த விவாதம் 3 நாட்கள் நடைபெறும் என்றும், பிரதமர் திரு. நரேந்திர மோடி வரும் புதன் கிழமையன்று, மக்களவையில் இந்த விவாதத்திற்கு பதில் அளிப்பார் என்றும் கூறினார். இந்த அலுவல்களை முடித்த பின், மக்களவையில், 2026-27ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட் மீதான விவாதம் தொடங்கும் என்றும், திரு. ரிஜிஜூ கூறினார்.

*பட்ஜெட் 2 (4)*

மாநிலங்களவையில், பாஜக எம்.பி திரு. சதானந்தன் மாஸ்டர், குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிந்தார். தொடர்ந்து, திரு. மேதா விஷ்ராம் குல்கர்னி, அதை வழிமொழிந்தார். இது குறித்த கூடுதல் தகவல்கள்.....

(வாய்ஸ்)

மக்களவையில் இன்று, குடியரசுத் தலைவரின் உரையில் இடம்பெற்ற, பெண் கல்வி குறித்த துணைக் கேள்விகளுக்கு பதில் அளித்த மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான், நாடு முழுவதிலும் உள்ள கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயாக்களில், தற்போது, 7 லட்சத்திற்கும் அதிகமான மாணவிகள் பயின்று வருவதாக கூறினார். அவர்களில் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவிகள், பட்டியல் இனத்தை சேர்ந்தவர்கள் என்றும், 1 லட்சத்து 77 ஆயிரம் பேர், பட்டியல் பழங்குடியினர் என்றும், 2 லட்சத்து 64 ஆயிரம் பேர், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்றும், திரு. தர்மேந்திர பிரதான் விளக்கம் அளித்தார். பள்ளிகளில், மாணவிகளின் மொத்த சேர்க்கை விகிதம் அதிகரித்துள்ளது, ஒரு நல்ல முன்னேற்றத்திற்கான அறிகுறி என்றும் அவர் கூறினார்.

குடியரசுத் தலைவரின் உரையில் இடம்பெற்ற காப்பீடு குறித்து பேசிய நிதித் துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சௌத்ரி , 2024-25ஆம் ஆண்டில், 8 லட்சத்து 35 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காப்பீட்டு கோரிக்கைகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தார். மக்களவையில் இன்று கேள்வி நேரத்தின் போது பதில் அளித்த அமைச்சர், 2024ஆம் ஆண்டு முதல், விவசாயிகள் உட்பட, சாமானிய குடிமக்களின்

*பட்ஜெட் 4 (6)*

மேம்பாட்டிற்காக மத்திய அரசு பல்வேறு காப்பீட்டு திட்டங்களை தொடங்கி உள்ளதை சுட்டிக் காட்டினார். பிரதான் மந்திரி சுரக்க்ஷா பீமா யோஜனா திட்டத்தில், சுமார் 50 சதவிகிதம் பேர் பெண்கள்

என்றும் அவர் குறிப்பிட்டார். மேலும், சுகாதார காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், 99 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கோரிக்கைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாகவும், திரு. பங்கஜ் சௌத்ரி தெரிவித்தார்.

-----------------------------

*பட்ஜெட்-ஜெகதாம்பிகா பால்* (12)

குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தின் போது, காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்கட்சிகள் ஏற்படுத்திய அமளியை தொடர்ந்து, மக்களவை, பிற்பகல் 3 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது. மக்களவை எதிர்கட்சித் தலைவர் திரு. ராகுல்காந்தி தனது உரையின் போது முன்னாள் ராணுவ தளபதி எம்.எம். நரவானேயின் வெளியிடப்படாத புத்தகத்தை மேற்கோள் காட்டி விவாதத்தை தொடங்கிய போது, மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், எதிர்ப்பு தெரிவித்தார்.

மக்களவை தலைவர் திரு. ஓம். பிர்லாவின் உத்தரவிற்கு கட்டுப்படாததற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, பாஜக எம்பி ஜெகாதாம்பிகா பால் கோரிக்கை விடுத்தார். ஆகாஷ்வாணி செய்திக்கு பேட்டி அளித்த அவர், திரு. ராகுல் காந்தி, முன்னாள் ராணுவ தளபதி எம்.எம். நரவானே எழுதிய இன்னும் வெளியிடப்படாத ஒரு புத்தகம் குறித்து பேசியது கண்டிக்கத் தக்கது என்று, கூறினார்.

-----------------------------

*பாரத ஸ்டேட் வங்கி* (10)

பாரத ஸ்டேட் வங்கியின் தலைவர் திரு. சல்லா ஸ்ரீனிவாசலு செட்டி, உலகளாவிய போட்டித் தன்மையுடன், இந்தியாவை புத்தாக்கம், மற்றும், மேம்பட்ட உற்பத்தி மையமாக மாற்றுவதற்கான மத்திய பட்ஜெட் இது என்று, கூறியுள்ளார். இந்த ஆண்டு பட்ஜெட் கொள்கை தொடர்ச்சி, வரி முன் கணிப்புத் தன்மை ஆகியவற்றை தக்க வைத்துக் கொண்டு, கிராமம், மற்றும், நகர்ப்புறங்களில், பாரம்பரிய மற்றும், வளர்ந்து வரும் துறைகளுக்கு இடையே ஒரு சமநிலையை உருவாக்கும் பட்ஜெட்டாக இது விளங்குகிறது என்று, தெரிவித்தார். மேலும், சந்தனம், முந்திரி, மற்றும், மீன்வளம் போன்ற உயர் மதிப்புள்ள பொருட்களுக்கு பட்ஜெட்டில் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

-----------------------------

*ஜெய்சங்கர்* (10)

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், 3 நாள் பயணமாக, இன்று, அமெரிக்கா சென்றுள்ளார். அந்நாட்டு வெளியுறவுத் துறை செயலாளர் திரு. மார்கோ ரூபியோ தலைமையில் நடைபெற உள்ள, முக்கிய கனிமங்கள் தொடர்பான அமைச்சர்கள் கூட்டத்தில் டாக்டர் ஜெய்சங்கர் பங்கேற்க உள்ளார். இந்த அமைச்சர்கள் கூட்டத்தில், வினியோக சங்கிலி மீள்தன்மை, தூய்மையான எரிசக்தி மாற்றங்கள், மற்றும், முக்கிய கனிமங்களை கையாள்வது குறித்து,

விவாதிக்கப்பட உள்ளது என்று, வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. மேலும் இந்த பயணத்தின் போது, டாக்டர் ஜெய்சங்கர், அமெரிக்க நிர்வாகத்தின் மூத்த உறுப்பினர்களையும் சந்தித்து உரையாட உள்ளார்.

-----------------------------

*மன்சுக் மாண்டவியா* 1 (4)

விக்சித் பாரத் இளம் தலைவர்கள் உரையாடல் 2026-ன் வெற்றியை தொடர்ந்து, **மை பாரத் பட்ஜெட் குவெஸ்ட்** என்ற தலைப்பில், ஒரு புதிய இளைஞர் முன்னெடுப்பை மத்திய அரசு தொடங்க உள்ளது என்று மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார். மேலும் இது குறித்த விவரங்கள்…..

(வாய்ஸ்)

இந்த முன்னெடுப்பு, இந்த ஆண்டு சமர்பிக்கப்பட்ட மத்திய பட்ஜெட்டை அடிப்படையாக கொண்டது. இந்த போட்டி, நாளை முதல், மை பாரத் தளத்தில், தொடங்கும் என்றும், முதல் சுற்றில், 30 கேள்விகளை கொண்ட ஒரு ஆன்-லைன் வினாடி-வினா-வாக இருக்கும் என்றும், அவர் தெரிவித்துள்ளார். மேலும், இப்போட்டிகளில் பங்கேற்பதற்கு வரும் 17ஆம் தேதி கடைசி நாள் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. தொடர்ந்து, ஒவ்வொரு மாநிலத்தில் இருந்தும் சிறந்த போட்டியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, மார்ச் 3ஆம் தேதி வரை நடைபெற உள்ள, 2ஆவது சுற்றில், மத்திய பட்ஜெட் தொடர்பான 8 தலைப்புகள் கொண்ட, கட்டுரை எழுதும் போட்டியில் பங்கேற்பார்கள். இதில் தேர்ந்தெடுக்கப்படும் இளைஞர்கள், விக்சித் பாரத் பட்ஜெட் குறித்த தொலை நோக்குப் பார்வை பற்றி, பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன், மார்ச் மாதம் நடைபெற உள்ள கலந்துரையாடலுக்கு அழைக்கப் படுவார்கள் என்றும், அறிவிக்கப் பட்டுள்ளது.

-----------------------------

*சி.ஆர். பாட்டீல்* (13)

இந்தியாவில் உள்ள ஒவ்வொரு கிராமப்புற வீட்டிற்கும், பாதுகாப்பான மற்றும் நிலையான குடிநீரை வழங்குவதில், மத்திய அரசு உறுதியாக உள்ளது என்று, மத்திய ஜல் சக்தித் துறை அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல் தெரிவித்துள்ளார். இன்று, மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது பேசிய அவர், ஜல் ஜீவன் திட்டத்தி கீழ், 16 கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்கள், தங்கள் வீடுகளில், சுகாதாரமான குடிநீரால் பயனடைந்து வருவதாகவும், 80 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட கிராமப்புற குடும்பங்கள் தற்போது, குழாய் நீர் இணைப்புகளை பெற்றுள்ளதாகவும் கூறினார். உலக சுகாதார அமைப்பின் அறிக்கையின்படி, வீடுகளுக்கு குடிநீர் வழங்குவதன் மூலம், சுமார் 8.4 லட்சம் கோடி ரூபாய் சேமிக்கப் பட்டுள்ளதாகவும், அமைச்சர் கூறினார். மேலும், இந்த திட்டத்தின் கீழ், கள

சோதனை கருவிகளை கொண்டு நீரின் தரத்தை சோதிக்க 25 லட்சம் பெண்களுக்கு பயிற்சி அளிக்கப் பட்டுள்ளதாகவும் திரு. பாட்டீல் தெரிவித்தார்.

-----------------------------

*பட்ஜெட்-ராமலிங்கம்* (11)

மூலதன செலவின் உள்கட்டமைப்பை பலப்படுத்த அதிக நிதி ஒதுக்கப் பட்டுள்ளதாக, புதுச்சேரி பாஜக மாநில தலைவர் திரு. ராமலிங்கம் கூறியுள்ளார். இன்று செய்தியாளர்களை சந்தித்த அவர், நாட்டின் பொருளாதாரம், நிலைத் தன்மையுடன் உள்ளதாகவும், சிறு-குறு தொழில் முனைவோர் வளர்ச்சிக்கு அதிக நிதி ஒதுக்கி, புதிய தொழில்கள் ஊக்குவிக்கப்படும் என்றும் தெரிவித்தார். மத்திய அரசின் பட்ஜெட், வளர்ச்சி அடைந்த பாரதம் என்ற பிரதமரின் இலக்கை நோக்கி செல்வதாகவும், கூறியுள்ளார். மேலும், கடந்த ஆண்டை விட, புதுச்சேரிக்கு இந்த பட்ஜெட்டில், 86 கோடி ரூபாய் கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், வரும் 15ஆம் தேதிக்குள் பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுச்சேரிக்கு வர உள்ளதாகவும் அவர் கூறினார்.

-----------------------------

*செயற்கை நுண்ணறிவு மாநாடு* (12)

செயற்கை நுண்ணறிவின் தாக்கம் குறித்த உச்சி மாநாடு வரும் 16ஆம் தேதி, புதுடெல்லியில் தொடங்க உள்ளது. 5 நாட்கள் நடைபெற உள்ள இம்மாநாட்டில், 15 முதல் 20 நாடுகளைச் சேர்ந்த, 35 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பதிவு செய்துள்ளதாக, மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் தெரிவித்துள்ளது. பல்வேறு நாடுகளின் அமைச்சர்கள், மற்றும், உலகின் முன்னணி நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரிகள், பிரதிநிதிகள் இதில் பங்கேற்க உள்ளனர். மேலும், ஆராய்ச்சியாளர்கள், தலைமை தொழில்நுட்ப அதிகாரிகள், மற்றும், உலகளாவிய செயற்கை நுண்ணறிவு அமைப்பை சேர்ந்த சுமார் 500 முக்கிய பிரமுகர்களும் இதில் பங்கேற்று, கலந்துரையாட உள்ளனர். செயற்கை நுண்ணறிவு ஸ்டார்ட்-அப் நிறுவனங்களின் கண்காட்சியும் இதில் இடம்பெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

-----------------------------

*முப்படைகள்* (11)

முப்படைகளின் எதிர்கால போர் பயிற்சியின் 3ஆவது பதிப்பு, இன்று புதுடெல்லியில் தொடங்கியது. 3 வாரங்கள் நடைபெற உள்ள இந்த பயிற்சி காலத்தில், நவீன போரின் சிக்கலான சவால்களுக்கு, அதிகாரிகளை தயார் படுத்துவதே முக்கிய நோக்கமாகும். ஒருங்கிணைந்த, பாதுகாப்பு பணியாளர் தலைமையகம் மற்றும் கூட்டு போர் ஆய்வுகளுக்கான மையத்துடன் இணைந்து நடத்தப்படும் இந்த பயிற்சித் திட்டத்தில், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களின் நடைமுறை விளக்கங்கள், மற்றும், பாதுகாப்பு படைகளின் திறன்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று

அமைச்சகம் கூறியுள்ளது. மேலும், அரிய பூமிக் கூறுகள், வினியோக சங்கிலி பாதிப்புகள், மற்றும், எதிர்காலத்தில் செயல்பாடுகளின் தாக்கம் ஆகியவை குறித்து, நிபுணர்கள் விவாதிக்க உள்ளனர்.

-----------------------------

*சிங்கப்பூர் விமான கண்காட்சி* (11)

இந்த ஆண்டு, சிங்கப்பூரில் நடைபெற உள்ள விமான கண்காட்சியில், இந்திய விமானப் படை பங்கேற்க உள்ளது. இந்தியாவின் வான்வழி திறன்களை வெளிபடுத்தும் விதமாக, சாரங் ஹெலிகாப்டர் சாகசக் குழுவுடன், இந்திய விமானப்படை பங்கேற்க உள்ளது என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இலகு ரக ஹெலிகாப்டரான துருவ் விமானம், இந்த கண்காட்சியில் இடம்பெற உள்ளது குறிப்பிடத்தக்கது. நாளை முதல், வரும் 8ஆம் தேதி வரை நடைபெற உள்ள இந்த வான் சாகச நிகழ்ச்சி, சிங்கப்பூரின் சாங்கி கண்காட்சி மையத்தில் நடைபெற உள்ளது.

இந்த நிகழ்ச்சியில், 4 குழுக்களின் விமான சாகச நிகழ்ச்சிகளும், 37 விமானங்களின் நிலையான கண்காட்சியும் இடம் பெற உள்ளன.

-----------------------------

*விளையாட்டு* (8)

ஆசிய ரைஃபிள் மற்றும் பிஸ்டல் சுடுதல் சேம்பியன் ஷிப் 2026க்கான போட்டிகள், இன்று, புதுடெல்லியில் உள்ள டாக்டர் கர்னி சிங் துப்பாக்கி சுடுதல் அரங்கில் தொடங்கியது. வரும் 14ஆம் தேதி வரை நடைபெற உள்ள இப்போட்டியில், ஆசியா முழுவதிலும் இருந்து, விளையாட்டு வீரர்கள் பங்கேற்க உள்ளனர். ஆண்கள், பெண்கள், ஜூனியர், மற்றும் இளைஞர் பிரிவுகளில், தனி நபர் மற்றும், கலப்பு அணிகள் பங்கேற்கும் இந்த சேம்பியன் ஷிப் போட்டிகளில், இந்தியா, பங்களாதேஷ் உள்ளிட்ட 17 நாடுகள் பங்கேற்க உள்ளன.

-----------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று ஒடிசா மாநிலத்திற்கு 6 நாள் பயணம் மேற்கொண்டுள்ளார்.

குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம், நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும், இன்று, விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விக்சித் பாரத் இளம் தலைவர்கள் உரையாடலை தொடர்ந்து, **மை பாரத் பட்ஜெட் குவெஸ்ட்** என்ற தலைப்பில், ஒரு புதிய இளைஞர் முன்னெடுப்பை மத்திய அரசு தொடங்க உள்ளது.

புதுச்சேரிக்கு, கடந்த ஆண்டை விட, இந்த பட்ஜெட்டில், 86 கோடி ரூபாய் கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக மாநில பாஜக தலைவர் திரு. ராமலிங்கம் கூறியுள்ளார்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது**